[1982 ஏப்ரல் 1

கொடைக்கானல் நகரியத்தால் வசூலிக்கப்படும் புதிய வரி.

*வினா எண் 705— திரு. கா. கோபாலகிருஷ்ண்ன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் நகரியத்தால் புதிதாக ஒரு வரி விதிக்கப்பட்டு நகருக்குள் நுழைபவர்களிடம் வசூலிக்கப்படு கிறதா ?

(ஆ) அதன் காரணம் என்ன ?

(இ) இந்த புதுவரி விதிப்பு இல்லாமல் நகரியத்தின் மொத்த வருமானம் என்ன ? செலவு என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சுற்றுலாப் பயணிகளிடம் வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) நகரியப் பகுதியில் உள்ள சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களை அழகுபடுத்த நகரியத்தின் நிதி நிலைமை பற்றாக்குறையாக இருப்பதால் மேற்படி கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

(இ) 1980-81 ஆம் ஆண்டின் நிதி நிலைப்படி வருமானம் ரூ. 15,85,983, செலவு ரூ. 16,35,315.

திரு. என். எஸ். சித்தன் : மாண்புமிகுத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகச் சிறந்த மலை வாசஸ்தலம் என்று கருதப்படுகின்ற இந்தக் கொடைக்கானலிலே இப்போது வாகனங்களுக்கு வசூலிப்பது போல் வேறு எங்காவது இதுமாதிரி வாசஸ்தலத்தில் வசூலிக்கிறார்களா ? இப்படி வாகனங்களுக்கு வசூலிப்பதிலே அரசாங்கத்திற்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இங்கே கொடைக்கானலைத் தவிர, வேறு நகரியங்களிலே, மலை வாசஸ்தலத்திலே வசூலிக்கப்படுவது இல்லை. ஆனால் மலைப் பாங்கான நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் ஊராட்சிகளில் இதுபோன்று சுங்கவரி போல் டாக்ஸ் வசூலிப்பதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது கொடைக் கானலில் வசூலிக்கப்படுகின்ற காரணத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 1,20,000 ரூபாய் கிடைக்கிறது.

1982 ஏப்ரல் 1]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய வாசஸ்தலங்களிலே வசூலிக்காத நிலையிலே, கொடைக் கானலில் மட்டும் வசூலிப்பது பாரபட்சம் கொடுக்கும் என்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் இதை ரத்து செய்துவிட்டு நிதிப் பற்றாக்குறையாக இருக்குமானால் வேறு இனங்களில் வரியை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் நல்ல யோசனைகளைச் சொல்லவேண்டும். ஏன் என்று சொன்னால், வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிகளை நாம் ஆராய்ந்து வருகிறோம். இருக்கக்கூடிய வருமானத்திலே, ஒவ்வொரு நகராட்சியாக இருந்தாலும், நகரியங்களாக இருந்தாலும், சொத்துவரி தான், அங்கே வசூலிக்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏற்கனவே தலைக்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, வருமானத்தை பெருக்கவேண்டுமென்று சொன்னால், அதுபோன்ற நிலைகளில் தான் ஏழை எளிய மக்கள் பாதிக்காத வகையில் இப்படி வாகனங்களுக்கு நாம் வரி விதித்துத்தான் செய்யமுடியுமே தவிர, வேறு வழியில்லை, எனக்குத் தெரிந்தவரையில். மாண்புமிகு உறுப்பினர் நல்ல யோசனைகளை அரசுக்குத் தெரிவித்தால் அதையும் ஆராய்வோம்.

(முற்பகல் 9—30)

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, கொடைக்கானலிலே இருக்கக்கூடிய லாரிகள், டாக்சிகள் அடிக்கடி கீழே 5 மைலோ அல்லது 10 மைலோ போய் திரும்பி வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அவைகளுக்கு இந்தக் கட்டணம் வசூல் செய்வதை அரசாங்கம் தவிர்க்குமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, உள்ளூர் டாக்சியாக இருந்தாலும், வெளியூர் டாக்சியாக இருந்தாலும் ஜீப்பாக இருந்தாலும் நாள் ஒன்றுக்கு 5 ரூபாய்தான் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது அதிகம் இல்லை என்று தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினர் தொண்டமான் அவர்கள் கொடைக்கானலிலே இருக்ககூடியவர்கள். அவர்களும் அந்த நகரிய பொறுப்பிலே இருந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த நகரியத்திற்கு என்ன வருமானம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும்கூட நிதிநிலையை அதிகரிக்க நல்ல ஆலோசனைகளைச் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.